*பிரசங்கம் 9*

## கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு நிலைநாட்டுதல்:

# "இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது"

## (1 கொரிந்தியர் 11:23-26; காண்க மத்தேயு 26:27, 28; லூக்கா 22:20)

## எடி குளோர்

*இயேசு தமது சீஷர்களுடன் பஸ்கா உணவை உண்டபின்பு, அவர்களுடன் தாம் கடைபிடிக்க விரும்பிய இன்னொரு இராப்போஜனத்தை நோக்கி அவர்களின் கவனத்தைத் திருப்பினார். அவர் அப்பத்தை - பஸ்கா உணவின் பாகமாயிருந்த புளிப்பில்லாத அப்பத்தை - எடுத்து அதில் அவர்கள் ஒவ்வொருவரும் பங்கேற்கும்படி கேட்டுக்கொண்டார். அதை அவர் ஆசீர்வதித்தபின், அவர்களிடத்தில் அவர், "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று கூறினார் (லூக்கா 22:19). அவரது ஒருசில வார்த்தைகள் அவரது பூமிக்குரிய வாழ்வினூடே கடந்து சென்று அவரது தியாகமான மரணத்தில் முடிவடைந்து, அவரது திரு அவதாரம், சிலுவையில் அறையப்படுதல் மற்றும் அணுகிக்கொண்டிருந்த அவரது மரணத்தின் பதிலீட்டு இயல்பு ஆகியவற்றை விசேஷமாக முக்கியத்துவப் படுத்தின.*

*இதைத் தொடர்ந்து இயேசு, திராட்சரசம் நிறைந்த கிண்ணத்தை எடுத்து, அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவரும் அதில் பானம்பண்ண வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதற்கு நன்றி செலுத்தியபின் அவர், "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று கூறினார் (மத்தேயு 26:28).*

*நமது மீட்பர் உருவக மொழிநடையைப் பயன்படுத்தினார் என்பதைக் காட்சியமைவு தானே வலியுறுத்திற்று. அப்பம் உண்மையிலேயே அவரது உடலாகவோ அல்லது பாத்திரம் அவரது உண்மையான இரத்தத்தைக் கொண்டிருக்கவோ முடியாதிருந்தது; ஏனெனில் அவர் தம்மைப் பின்பற்றியவர்களுடன் அங்கு இருந்தார் மற்றும் அவரே அவர்களுக்கு அப்பத்தையும் பாத்திரத்தையும் முன்வைத்துக் கொண்டிருந்தார். அவர் தாம் விரைவில் மரிக்கவிருந்த மரணத்தை நினைவுகூரும் வகையில் ஒரு நினைவுகூரும்*

இராப்போஜனத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

மேல்வீட்டில் அப்போஸ்தலர்கள் இந்த இராப்போஜனத்தை முதன்முதலாகக் கடைப்பிடிக்கையில், அவர்கள் அதன் தனிச்சிறப்பு பற்றிய தக்கவகையிலான புரிந்துகொள்ளுதலுடன் அதில் பங்கேற்பதற்குப் போராடினர். நடக்கப் போகிறவைகளின் முழு அர்த்தத்தையும் அவர்கள் அறியாதிருந்தனர். அவர்களுக்கு இயேசுவின் மரணம் பற்றிய சில விஷயங்கள் தெரிந்திருந்தன, ஏனெனில் இயேசுவே அதைப்பற்றி அவர்களுக்கு அடிக்கடி கூறியிருந்தார் (மத்தேயு 16:21; மாற்கு 8:31); ஆனால் அவர்களுக்கு இயேசு கூறியிருந்தவற்றை அவர்கள் கொஞ்சமே புரிந்து கொண்டு இருந்தனர். பிற்பாடு அவர்கள், நாம் செய்வது போன்று, அவரது கூற்றுக்களைப் பின்னோக்கிப் பார்ப்பார்கள் மற்றும் அவரது வார்த்தைகள் கொண்டுவரும் ஆழமான அர்த்தத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பார்கள்.

அவரது கூற்றுக்களை நாம் திரும்பவும் பார்ப்போம். அவர் தமது இரத்தத்தைப் பற்றிப் பேசிய இந்த வார்த்தைகள் எவ்வளவு நம்பிக்கையும் உற்சாகமும் ஊட்டுவதாக இருந்தன! "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத்தேயு 26:27ஆ, 28). அவரது புத்திமதியின் ஒவ்வொரு சொற்றொடரும் கவனத்துடன் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும்.

*"இதிலே பானம் பண்ணுங்கள் ... இது ... என்னுடைய இரத்தமாயிருக்கிறது."* இங்கு நாம், அவரது தியாகத்தின் *ஆழத்தைக்* காணுகிறோம். அவர் ஒப்புக்கொடுத்த பலியானது அவரது வாழ்வு முழுவதையும் கேட்டது. இயேசு, தமது பலியின் முழுமைத்தன்மையை "என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்ற வார்த்தைகளில் தொகுத்துரைத்தார், ஏனெனில் இரத்தம் என்பது ஜீவனுக்கு ஒப்பானதாக உள்ளது. இயேசு தமது இரத்தத்தை ஊற்றியபோது, அவர் தமது ஜீவனை ஊற்றினார். பழங்காலத்திய இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன், "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே" என்று கூறினார் (லேவியராகமம் 17:11).

*"இதிலே பானம்பண்ணுங்கள் ... இது ... உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது."* இங்கு நாம், அவரது தியாகத்தின் நீளத்தைக் காண்கிறோம். "உடன்படிக்கை" என்ற வார்த்தை, இரட்சிப்பிற்காகத் தேவனிடத்திற்கு வரும் எல்லாரோடும், தேவன் நிலைநாட்டிய கட்டுப்படுத்தும் ஒப்பந்தத்தைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. அவரது தியாகத்தின் நீடிய தன்மையானது, அவரது இரத்தத்தினால் செல்லுபடியாக்கப்பட்ட உடன்படிக்கையில் காணப்படுகிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வருமாறு கூறினார்:

> கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைக்களுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும்

> *உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். ... ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார் (எபிரெயர் 9:11-15).*

இயேசுவின் மரணமானது, உலகத்தின் கடைசி யுகமான கிறிஸ்தவ யுகம் முழுவதிலும், உடன்படிக்கையின் வடிவில் இரட்சிப்பின் வழியை அளிக்கும்.

*“இதிலே பானம்பண்ணுங்கள் ... இது ... அநேகருக்காகச் சிந்தப்படுகிற ... என்னுடைய இரத்தமாயிருக்கிறது.”* இங்கு நாம், அவரது தியாகத்தின் *அகலத்தைக்* காணுகிறோம். இயேசுவின் இரத்தம் பூமியில் உள்ள எல்லா மக்களையும் சென்று அடையும். இந்த அளவீடானது இயேசு எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதை நமக்குக் கூறுகிறது: “என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்” (எபிரெயர் 2:9). சுவிசேஷத்தின் செய்தியை ஏற்றுக்கொண்டு இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டுள்ள ஒவ்வொருவருக்காகவும் அவர் மரிப்பார். பூமியின் மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது, ஒருசிலர் மாத்திரமே ஒரு இடத்தில் அல்லது ஒருவேளையில் கீழ்ப்படியலாம் என்றிருக்கையில், இரட்சிக்கப்பட்டவர்கள் காலத்தினூடே உலகம் முழுவதிலும் இரட்சிக்கப்பட்ட “பலருடன்” உள்ளடங்குவார்கள்.

*“இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற ... என்னுடைய இரத்தமாயிருக்கிறது.”* இங்கு நாம் அவரது தியாகத்தின் உயரத்தைக் காணுகிறோம். நமது பாவங்களை நீக்குவதற்காக, நமது மீறுதல்களுக்கு நிவாரண பலியாக இருப்பதற்காக இயேசு மரித்தார். இயேசுவின் மூலமாகத் தேவனிடத்திற்கு வருபவர்களுக்கு அவர் [தேவன்], “நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்” என்று கூறினார் (எபிரெயர் 8:12). மோசேயின் பிரமாணத்தினுடைய மிருகபலிகள் தொடர்ந்து மற்றும் திரும்பத் திரும்பச் செலுத்தப்பட்டன. எபிரெயர் 10:11-13 வசனப்பகுதி பின்வருமாறு கூறுகிறது:

> *அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்.*

நமது கர்த்தருடைய மரணம் செயல்விளைவான பூரணத்தன்மையும்

*நித்தியத்துவமும் உடையதாயிருந்தது.*

*மேல்வீட்டில் இயேசுவின் வார்த்தைகள் எளியவையாக, சுட்டிக்காண்பித்தவையாக மற்றும் ஒருசில வார்த்தைகளாக இருந்தன, ஆனால் அவைகள், நாம் அவரது இராப்போஜனத்தில் பங்கேற்கும் போது நமது தியானத்தை வசீகரிக்கும் மீட்பின் சிந்தனைகளின் பரவலான எல்லையை எடுத்துரைத்து முடிக்கின்றன. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத்தேயு 26:28). இங்கு, இயேசு தமது மரணத்தின் மூலம் கொண்டுவந்த மாபெரும் மற்றும் மகிமையுள்ள இரட்சிப்பின் ஆழமும், நீளமும், அகலமும், உயரமும், சுருக்கமான மற்றும் உருவகமான நடையில் காணக்கிடக்கிறது.*